குறுக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம் 5.00PM

அ.வ.எண் 24/2014 நாள் 21.08.2019 சிதம்பரம், த/பெ. கருப்ப கோனார்

DW1

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

5, 6 பிரதிவாதிகள் என் சகோதரர்கள் என்றால் சரிதான். 8, 9, 10 பிரதிவாதிகள் எனக்கு அக்கா. 11 ம் பிரதிவாதி என் மகன். 14ம் கபிரதிவாதி 6ம் பிரதிவாதியின் மகன். 12, 13 பிரதிவாதிகள் என்னிடமும் 11 ம் பிரதிவாதியான என் மகனிடம் கிரயம் பெற்றவர்கள் என்றால் சரிதான். வாதி சூரியமூர்த்தி ரெங்கசாமி கோனார் மகன் என்றால் சரிதான். அந்த ரெங்கசாமி கோனார் மகன்கள் தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி ரெங்கசாமியின் மனைவி என்றால் சரிதான். ரெங்கசாமியும் பெரியான்கோனாரும் அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். அவர்களது அப்பா பொட்டு கோனார் என்றால் சரிதான். பொட்டு கோனாருக்கு பெரியநாயகி என்ற மகள் உண்டு என்றால் சரிதான். பொட்டு கோனாரின் சகோதரர் பெயர் ரெங்கு கோனார் அவரது மனைவி பெயர் ஆத்தாள். அவர்களுக்கு பிறந்த மகள்தான் அன்னபூரணி. அந்த அன்னபூரணியின் பிள்ளைகள் தான் 5 முதல் 10 வரையிரலான பிரதிவாதிகள் என்றால் சரிதான். வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் பொட்டு கோனார் வகையறாவை சோந்தவர் என்றால் சரிதான். 5 முதல் 10 பிரதிவாதிகள் ரெங்க கோனார் வகையறாவை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பொட்டு கோனார் ரெங்க கோனாருக்கு கேஸ் நடக்கும் சொத்து தவிர வேறு சொத்து கிடையாது என்றால் சரிதான். வழக்கு நடப்பது மொத்தம் 36 செண்டு என்றால் சரிதான். அந்த சொத்து ஒரே இடத்தில் சோந்தாற்போல் உள்ளது என்றால்' சரிதான். 36 செண்டுக்குரிய வருவாய் ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த 36 செண்டு யார் பெயரில் உள்ளது என்றால் பொட்டு கோனார் மகன் ரெங்கசாமி பெயரில் 12 செண்டு, கருப்ப கோனார் மகன் சிதம்பரம் பெயரில் 12 செண்டு, கருப்ப கோனார் மகன் ரெங்கசாமி பெயரில் 12 செண்டு உள்ளது. நான் சொல்வது பட்டா தான் என்றால் சரிதான். இந்த 3 பேருக்கு மட்டும்தான் சொத்தில் உரிமையுண்டா அல்லது மற்றவர்களுக்கு பங்கு உண்டா என்றால் பெண் பிள்ளைகளுக்கு கிடையாது அவர்களுக்கு சீர் வரிசை செய்யப்பட்டுவிட்டது எங்களுக்கு மட்டும்தான் பங்கு உள்ளது. அவரவர் பெயருக்கு தனிப்பட்டா உள்ளதாக சொல்லியுள்ளேன் அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் செய்யலாம். இவ்வழக்கில் அந்த பட்டாவை போட்டுள்ளேனா என்றால் இல்லை.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 5.20PM

Sd/- சிதம்பரம்,

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- G. Sathiakumar,

District Munsif, Pattukkottai,(FAC)